**ஜூலை - 28**

**"நீதியினிமித்தம் நீங்கள் பாடுபட்டால், பாக்கியவான்களாய் இருப்பீர்கள்." - 1பேது 3 : 14**

நேராகவோ அல்லது மறைமுகமாகவோ சத்தியத்தின் பேரில் நமக்கிருக்கிற பற்றுதலுக்காக மாத்திரம் நாம் வெறுக்கப்பட்டால், அதில் திருப்தியடைய வேண்டியவர்களாக இருக்கிறோம். அல்லது நீதியினிமித்தம் நாம் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்று நினைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகிறது போல, சிலர் தீமை செய்கிறவர்களாயிருக்கிறதினாலும், பிறர் காரியத்தில் தலையிடுகிறதினாலும், அல்லது சாந்தமாயிராத காரணத்தாலோ, நல்லொழுக்கமில்லாத காரணத்தாலோ, அல்லது கர்த்தருடைய வார்த்தை அறிவுறுத்துகிற மிதமான நடத்தையைப் பராமரிக்கும் ஞானத்தை உடையவர்களாயிராததினாலோ துன்பப்படுகிறார்கள். கர்த்தருடைய சித்தத்தை ஆராய்ந்து பார்ப்பது மாத்திரமல்லாமல், நம்மை சுற்றியிருக்கிற சூழ்நிலைகளையும், நிலைமைகளையும் நன்றாக ஆராய்ந்தறிவதும் நம்முடைய கடமையாகும். தெய்வீக அங்கீகாரம் பெற்றதும், மற்றவர்களுக்கு எவ்வளவு குறைவாக கஷ்டமும் அசௌகரியமும் கோபமும் கொடுக்கிறதுமான இவ்விரண்டுமிதமான நடத்தையைப் பராமரித்து, அதற்குப் பிறகு கர்த்தருடைய கண்காணிக்கும் ஞானத்திலும் பராமரிப்பிலும் நம்பிக்கையுடன் சார்ந்திருப்பதும் நம்முடைய கடமையாகும். -
**Z ’99, 166, 167 (R 2492)**

விழித்திருப்பதிலும், ஜெபத்திலும் தேவனுடைய வார்த்தையை ஆராய்வதிலும், அதைப் பரப்புவதிலும், அதற்கு இணக்கமான ஒரு குணத்தை அபிவிருத்தி செய்வதிலும், தனக்கும் உலகத்திற்கும் மரித்துத் தேவனுக்கென்று பிழைத்திருக்கிற ஆர்வத்தினால், நம்மேல் தீமையை வருவித்துக் கொள்ளுவதே நீதியினிமித்தம் பாடுபடுவதைக் குறிக்கிறது. இவ்விதமாக செய்கிறவர்கள் உண்மையாகவே சந்தோஷமுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஏனென்றால், பிதா, குமாரன், பரிசுத்தவான்கள் இவர்களின் ஐக்கியமும் தேவனுடைய ஆவி, வார்த்தை, பராமரிப்பு கிறிஸ்துவோடு ராஜ்ஜியத்தில் பங்கு கொள்ளுவதிலுள்ள மகிமையான நம்பிக்கையும் அவர்களுடையது. ஆம் சர்வமும் அவர்களுடையது. **- P ’32, 95, 96.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**மத் 5:10-12; யாக் 1:2,12; 5:10; 1பேது 2:19-21; 4:12-19; அப் 9:16; ரோம 8:17,18,23; 1கொரி 4:12,13; 2கொரி 1:5-7; 4:16-18; பிலி 1:29; 3:10; கொலோ 1:24; 2தெச 1:4,5; 2தீமோ 2:12.**

**கோபுர வாசிப்பு : Z ’14, 291 (R 5544)**

**வினாக்கள் : நான் நீதியினிமித்தம் துன்பப்பட்டேனா? எப்படி? எது உதவி செய்தது அல்லது இடையூறாயிருந்தது? பலன்கள் எவை?**